மாலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 25 திங்கட்கிழமை 11.09.2023 அதிர்வு 42

## ரஷ்ய பிரஜையைத் தாக்கி 38 லட்சம் ரூபா கொள்ளை

ஹபராதுவ, தல்பே பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றுக்குள் வைத்து ரஷ்ய பிரஜையொருவரைத் தாக்கிக் காயப்படுத்தி பணத்தைக் கொள்ளையடித்தனர்

04▶

ஜனாதிபதி ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு:

# மீண்டும் ஏமாற்று நாடகம்

### சர்வதேச விசாரணையே நீதியை பெற்றுத்தரும் என்கிறார் பேராயர்



- ஏ.ஜே.சார்ள்ஸ் -

"ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழுவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் நியமிக்கப்படவுள்ளன என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இந்த நடவடிக்கை மூலம் மீண்டும் ஏமாற்று நாடகமே அரங்கேற்றப்படும். சர்வதேச விசாரணையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும்."

04▶




## ராஜபக்ஷக்களை மக்கள் வெறுக்கச் செய்யச் சதி!

### 'சனல் 4' தொடர்பில் மொட்டு எம்.பி. கருத்து

"ராஜபக்ஷக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே சனல் - 4 தொலைக்காட்சியால் போலியான வீடியோ வெளியிடப்பட்டு வருகின்றது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.

04▶

## மீண்டும் தாண்டவமாடும் டெங்கு 10 நாள்களில் 900 நோயாளர்கள்




இலங்கையில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரையில் 900 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

04▶

## உண்மைகள் வெளிவர இடமளிக்க வேண்டும்!

### ஹக்கீம் எம்.பி. வலியுறுத்து



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தேர்தல் வெற்றி ஒன்றை இலக்குவைத்து, நீண்டகாலமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பது வெளிப்பட்டுள்ள சம்பவங்கள் மூலம் ஊகித்துக்கொள்ள முடிகின்றது. அத்துடன் குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு முன்னாள் பிரதானிகள் வெளியில் வந்து உண்மையைத் தெரிவித்தால் இது இன்னும் கடுமையான போக்குக்குச் செல்ல இடமிருக்கின்றது.

04▶

## இலங்கை வருகிறார் கேரள முதலமைச்சர்



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், கேரள முதலமைச்சர் பினராயி விஜயனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கேரள முதலமைச்சர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கேரளாவுடன் இணைந்து

04▶



# திருகோணமலை மீனவர்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்!

(ஹஸ்பர்)

திருகோணமலை கடற்பரப்பில் சில மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை - சிறிமாபுர பகுதியில் மீனவர்கள் இன்று (11) காலை வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அந்தப் பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டு இருந்தது. பொலிஸார் உடன் தலையிட்டு வீதியை போக்குவரத்துக்குத் திறந்து வைத்தனர்.





# கிழக்கு மாகாணத்துக்கு பிரதிப் பிரதம செயலாளர் இன்று கடமையேற்பு

(அபு அலா)

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) எம்.எம்.நஸீர் தமது கடமைகளை இன்று (11) பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வழங்கப்பட்ட கடிதத்துக்கு அமைவாக பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயனாவால் இன்று வழங்கி வைக்கப்பட்ட கடிதத்துக்கு அமைவாகவே தமது கடமைகளை உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.மன்சூர், விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ.முத்துவண்டா, முதலமைச்சின் செயலாளர் என்.மதிவண்ணன், ஆளணி மற்றும் பயிற்சி பிரதிப் பிரதம செயலாளர் திருமதி ஆர்.யூ.ஜலீல், சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்கா உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# கைதிகள் தினத்தை முன்னிட்டு நாளை விசேட நிகழ்வுகள்

நாளை 12 ஆம் திகதி சிறைக் கைதிகள் தினம். இதனை முன்னிட்டுச் கைதிகளின் உடல், மன மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு வருடமும் பல வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. அதே போன்று இந்த வருடமும் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ளச் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புனர்வாழ்வுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அந்த வகையில், நாளை சர்வமத நிகழ்வுகள், சுகாதார வேலைத் திட்டங்கள், விளையாட்டு மற்றும் ஆளுமை நிகழ்வுகள், கல்வி மற்றும் போதனை நிகழ்வுகள், குடும்ப சந்திப்புகள், பொழுது போக்கு நிகழ்வுகள், போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான வேலைத் திட்டங்கள், கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளைச் சிறைச்சாலைகளுக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளுக்கு விசேட உணவு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறைக்கைதிகளின் ஆக்கத்திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் சிறைக் கைதிகள் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் 'சிறைப்படாத எண்ணங்கள்' எனும் பெயரில் சித்திரக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

# ரயிலில் மோதி இறந்தது யானை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)



கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதி யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெலிகந்த பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் இந்த ரயில் பாதை ஊடான போக்குவரத்தும் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிய போக்குவரத்தும் சில மணி நேரம் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# பெருந்தோட்டப் பகுதிகளில் விசேட வேலைத் திட்டங்கள்

பெருந்தோட்ட பகுதிகளில் பெருந் தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட இருக்கும் விசேட வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாக விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகளை நாடுவதற்கும் முன்மொழிவுகளை உருவாக்குவதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் விசேட செயற்றிட்டத்துக்கான ஸ்தாபனத்தின் தெற்காசியாவின் பணிப்பாளர் சார்லஸ் காலனன் மற்றும் விசேட செயற்றிட்ட முகாமையாளர், செயற்றிட்ட மேலாளர் ஆகியோருக்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது மேற்படி விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, நீர்வழங்கல் துறையில் விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தங்குதடையின்றி நீர்வழங்கலை மேற்கொள்ளவும், நீர் சுத்திகரிப்பில் மீளாக்க வலுவுற்பத்தியை பயன்படுத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

நீர்வழங்கல் துறையில் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்குதல் தொடர்பாகவும், பன்னாட்டு முதலீட்டு முறைமை மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் நீர் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பெருந்தோட்ட பகுதிகளில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட இருக்கும் விசேட வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இச்சந்திப்பில் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வருண சமரதிவாகர, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர் ஹரித்த விக்கிரமசிங்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர் வசந்தா இலங்காசிங்ஹ, எனது பிரத்யேக செயலாளர் மொஹமட் காதர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# மூன்றில் ஒரு தாய்மாருக்கு இலங்கையில் குருதிச்சோகை

## யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

**(த.சுபேசன்)**

இலங்கையில் மூன்றில் ஒரு தாய்மார் குருதிச் சோகை நோயால் பாதிப்படைகின்றனர் என்று யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

எமது நாட்டில் தாய், சேய் மரண விகிதம் குறைவடைந்துள்ள போதிலும், போசாக்கு நிலைமையை எடுத்துக் கொண்டால் தாய் மற்றும் சேய் போசாக்கு விகிதம் பன்மடங்கு மேம்படுத்தப்பட வேண்டும்.

ஒரு தாயின் போசாக்கு மேம்பாடு அவர் கர்ப்பமானவுடன் தொடங்கப்பட வேண்டியது அல்ல. ஒரு பெண்ணினுடைய வாழ்க்கை வட்டம் முழுவதுமே போசாக்கு கவனிக்கப்பட வேண்டும். குழந்தைப் பருவத்தில் இருந்து போசாக்கை மேம்படுத்தினால் மாத்திரமே ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

எமது சமூகக் கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் உணவு விடயத்தில் ஆண் பிள்ளைகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

எமது பாரம்பரியத்திலும் பெண்களது போசாக்கு நிலைமைக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றதா? என்றால் அதுவும் கேள்விக் குறியாகவே உள்ளது. பெண் பிள்ளைகள் பூப்படைந்தவுடனும், கர்ப்பமடைந்தவுடனும் மற்றும் குழந்தை பெற்றவுடன் மாத்திரமே அவர்களது போசாக்குக் கவனிக்கப்படுகிறது. இந்த நிலைமை மாறி பெண் பிள்ளைகளுக்குக் குழந்தைப் பராயத்தில் இருந்தே போசாக்கு மேம்படுத்தப்பட வேண்டும்.

எமது நாட்டில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் மத்தியில் குருதிச் சோகை நோய் காணப்படுகிறது. மூன்றில் ஒரு தாய்மார் குருதிச் சோகையால் பாதிக்கப்படுகின்றனர். குருதிச் சோகையால் பாதிப்படைந்த பெண்கள் பெற்றுக் கொள்ளும் குழந்தைகள் போசாக்கு குறைந்தவர்களாகவும், உளவிருத்தி குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

எனவே போசாக்கு நிலைமையை மேம்படுத்த வேண்டியது மிக அவசியம். அதனை வாழ்க்கைச் சக்கரம் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும்.– என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## உண்மைகள் வெளிவர...

அதற்கும் நாங்கள் இடமளிக்க வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. வலியுறுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளிப்படுத்தியிருக்கும் தகவல்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளிப்படுத்தியிருக்கும் புதிய தகவல்கள் மூலம் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பது வெளிப்பட்டிருக்கின்றன.

இந்த வெளிப்படுத்தல்கள் தொடர்பில் அரசு உத்தியோகபூர்வமாகத் தலையிடாமல், குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி இருப்பவர்கள் அது தொடர்பில் தங்களின் நியாயத்தைத் தெரிவிப்பதே நல்லது என ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

அத்துடன் சனல் 4 வெளிப்படுத்தி இருக்கும் தகவல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்குஅரசுதயார்எனவும்,அதற்குஎதிர்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் அரசின் முக்கியமான நிறுவனங்களுக்குக் குற்றச்சாட்டு தெரிவிப்பதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது என்ற வகையில் மேலும் ஒரு அமைச்சர் எச்சரிக்கும் வகையில் தெரிவித்திருந்தார். அரசில் சிலர் உண்மை வெளிவருவதற்கு விருப்பம் இல்லாமல் இருக்கின்றனர் என்பது இதனூடாகப் புலனாகின்றது.

நாடுதொடர்பில்எங்களுக்கும்கரிசனை இருக்கின்றது.என்றாலும்தேசஅபிமானிகள் என்ற போர்வையில் மறைந்து அப்பாவி மக்களைக் கொடூரமான முறையில் கொலை செய்த திரிபோலி குண்டர்களாகச் செயற்பட்ட அவர்களுக்கு ஆயுதக் குழுவொன்றுக்குத் தலைமைத்துவம் வழங்கிய அரசின் தற்போதைய அமைச்சர் ஒருவரும் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என்பதும் தற்போது வெளிப்பட்டிருக்கின்றது.

இதன் உண்மையை நாங்கள் தேட வேண்டும். யாரும் இதனை மறைக்க முடியாது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவது மாத்திரமல்லாது, இதன் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களின் உள்ளம் அமைதியடையச் செய்ய வேண்டும்.

அத்துடன் இந்தத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்துக்கு எதிராகப் பொய் பிரசாரங்களை மேற்கொண்ட குண்டர்கள், அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் நோக்கத்துக்காகச் செயற்பட்டவர்கள் தொடர்பான உண்மைகளை நாங்கள் வெளிப்படுத்தவேண்டும்.

இதன் மூலம் நாட்டின் முக்கிய நிறுவனங்களைப் பலவீனப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சிப்பதாக அர்த்தம் கற்பிக்க முடியாது. என்றாலும் சர்வதேசத்துக்கு முன்னால் உண்மையை வெளிப்படுத்தும் கடப்பாடு அனைவருக்கும் இருக்கின்றது. அதேபோன்று இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றச்சாட்டு தெரிவிக்கும்போது நாங்கள் மிகவும் பொறுப்புடனும் நாட்டின் நற்பெயருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் செயற்பட வேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தேர்தல் வெற்றி ஒன்றை இலக்குவைத்து, நீண்ட காலமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பது வெளிப்பட்டுள்ள சம்பவங்கள் மூலம் ஊகித்துக்கொள்ள முடிகின்றது. அத்துடன் குற்றப் புலனாய்வுத்துறை மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு முன்னாள் அதிகாரிகள் வெளியில் வந்து உண்மையைத் தெரிவித்தால் இது இன்னும் கடுமையான போக்குக்குச் செல்ல இடமிருக்கின்றது.

அதற்கும் நாங்கள் இடமளிக்க வேண்டும். சட்டத்தை மதித்துச் செயற்பட்ட பல அதிகாரிகள் உண்மையைத் தெரிவிப்பதற்கு முன்வர இருக்கின்றார்கள் என்பதையும் நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்றார்.

## ரஷ்ய பிரஜையை

எனக் கூறப்படும் ரஷ்யாவைச் சேர்ந்த மேலும் நால்வரைக் கைதுசெய்வதற்கு ஹபராதுவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில், 39 வயதுடைய ரஷ்ய பிரஜை காயங்களுடன் காலி – கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றார் என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான ரஷ்ய பிரஜைகள் நால்வரும் தேடப்பட்டு வருவதுடன், ரஷ்ய ரூபிளை இலங்கை ரூபாவுக்கு மாற்றிக் கொண்டிருந்த ரஷ்யப் பிரஜையே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தப் பணப் பறிமாற்றத்தின் போது இடம்பெற்றது என்று கூறப்படும் முரண்பாடு வலுப்பெற்றதைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தன்னைத் தாக்கிய ரஷ்யப் பிரஜைகள் தன்னிடமிருந்த 38 இலட்சம் ரூபாவைக் கொள்ளையடித்தனர் என்று பாதிக்கப்பட்ட நபர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் ஏமாற்று...

– இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள வீடியோ மிகவும் முக்கிய ஆவணம். சனல் 4 முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும். அதைவிடுத்து இங்கு நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம்.

அதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இதையும் நாம் அடியோடு நிராகரிக்கின்றோம்.

குற்றவாளிகள் உள்ள இடத்தில் நீதியை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. எனவே, சர்வதேச விசாரணையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும்." – என்றார்.

## இலங்கை வருகிறார்

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்திகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் 1970ஆம் ஆண்டு இலங்கையில் உள்ள மலையக மக்கள் (1,480 குடும்பங்கள்) கேரளாவில் மீள்குடியேற்றப்பட்டனர். இவர்கள் ஆர்.பி.எல். நிறுவனத்திலும், கேரளா வன அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திலும் தொழில் புரிகின்றனர். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் பணிகளுக்குக் கேரள முதல்வர் பினராயி விஜயன் வாழ்த்துக் கூறியதுடன், ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கைக்கு வருகை தருமாறு விடுத்த அழைப்பை ஏற்று இலங்கை வருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

## மீண்டும் தாண்டவமாடும்...

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்கள் சதவீதம் குறைந்திருப்பினும் மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பின் பெருக்கம் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கலாம் என்று டெங்கு ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## ராஜபக்ஷக்களை...

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இறுதிப் போர் தொடர்பிலும் போலியான வீடியோக்களை சனல் – 4 வெளியிட்டது. தற்போதும் அவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் விசாரணை நடத்தினால் உண்மை தெரியவரும்." – என்றார்.

### யாழில் பாலியல் துஷ்பிரயோக

# குற்றச்சாட்டுக்கு உள்ளான குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர், தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், காரைநகர் பகுதியைச் சேர்ந்த சிறுமியைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனும் குற்றச்சாட்டில், கடந்த 3ஆம் திகதி காரைநகர் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைது செய்ய அவரது வீட்டுக்குச் சென்றபோது குறித்த சந்தேகநபர் தனது உயிரை மாய்க்க முயன்றுள்ளார்.

அவ்வேளை அவர் காப்பாற்றப்பட்டு காரைநகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.










# யாழ். இந்து மகளிர் கல்லூரியின் 80 ஆவது ஆண்டும் பரிசளிப்பும்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் 80 ஆவது ஆண்டு நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரியில் நடைபெற்றன.

கல்லூரியின் அதிபர் சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ் வில் கல்லூரி முன்றலில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையும் இதன் போது திறந்து வைக்கப் பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் சரஸ்வதி சிலையை திரைநீக்கம் செய்து வைத்ததுடன் மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

இதன் போது கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டத்தின் ஆட்சி அவசியம்

இலங்கையில் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்தும் விசேட பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையிலான குழுவினால் அது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்திருக்கிறார்.

இந்த விசேட நடவடிக்கை திட்டத்தில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது. இந்த நடவடிக்கையில் மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் - குறிப்பாக தென் மற்றும் மேல் மாகாணங்களில் - துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் திடீரென அதிகரித்துள்ள பின்னணியில், இந்தப் பொலிஸ் நடவடிக்கை விசேடமாக முன்னெடுக்கப்படுகிறது. நாடெங்கிலும் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்படுகின்றமையால் ஒருவகையில் இது ஒரு யுத்த நடவடிக்கை - 'ஒபரேஷன்' - போன்றதுதான். அதுவும் இத்தகைய பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை அடுத்த ஆறு மாதங்களுக்குள் கட்டுப்படுத்தும் இலக்குடன் காலம் குறித்து முன்னெடுக்கப்படுவதால் இதனை பாதாள உலகம் கோஷ்டிகளுக்கு எதிரான ஒரு யுத்தப் பிரகடனமாகக் கூடக் கவனிக்கலாம்.

நாட்டில் போதைப்பொருள் பாவனை, விற்பனை போன்றவற்றை ஒட்டிய குற்றங்கள் அதிகரித்திருக்கின்ற பின்னணிக்கு இந்தப் பாதாள உலகக் குழுக்களே காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஒழுங்கமைக்கப்பட்ட - கட்டமைக்கப்பட்ட - பாதாள உலகக் குழுக்கள் பெருமெடுப்பில் இயங்குவது நாடு வன்முறை கும்பலின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருப்பதன் வெளிப்பாடு.

இந்தப் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை - மாபியா செயற்பாடுகளை - முடிவுக்குக் கொண்டு வந்தால்தான் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாவனையில் இருந்தும் கூட நாடு விடுபட முடியும். அதற்கு பாதாள உலகம் குழுக்களுக்கு எதிரான இத்தகைய யுத்தப் பிரகடனம் தவிர்க்க முடியாதது.

ஆனாலும் இயன்ற வரையிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி, சட்ட வரன்முறைக்கு அமைய, இந்த 'ஒபரேஷன்' முன்னெடுக்கப்படுவது அவசியம்.

இப்போது நடைபெறும் சூட்டுச் சம்பவங்களில் பெரும்பாலும் உயிரிழப்பவர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய நபர்கள்தான். பாதாள உலகக் குழுக்களிடையே நிகழும் முரண்பாடுகளின் விளைவே இக்கொலைகள் என்று பொத்தம் பொதுவில் கூறப்பட்டாலும், நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதற்காக சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய கடப்பாட்டைக் கொண்ட தரப்புகளின் அரூபக் கரங்கள் கூட மேற்படி ஒபரேஷனின் ஓர் அங்கமாக இந்த பிஸ்டல் சூடுகளை முன்னெடுக்கக் கூடும் என்ற சந்தேகம் மக்கள் மனதில் இல்லாமல் இல்லை.

கள்ளன் - பொலிஸ் விளையாட்டு வேளைகளில் சில சமயங்களில் பொலிஸ் மறை ரூபத்தில் கள்ளன் போலவும் கலந்து கொள்வது உண்டு.

அத்தகைய போக்கைத் தவிர்த்து, சட்டத்தின் ஆட்சியை சட்ட முறையில் நிலைநிறுத்துவதுதான் நியாயமாகும்.





## நயினாதீவு - நல்லூர் பாதயாத்திரை ஆரம்பம்

(என் .ஹரன் )

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து நல்லூரை நோக்கிய பாதயாத்திரை நேற்று (10) ஆரம்பமானது.

சப்த்த தீவக திவ்ய ஜீவன சங்கத்தின் ஏற்பாட்டில் 59 வருடம் இடம்பெறும் இந்தப் பாதயாத்திரை நல்லூர் கந்தசுவாமியின் தேர் திருவிழா தினத்தன்று ஆலயத்தை வந்தடையும்.

சகோதர இனத்தவர்களும் கலந்து கொண்டு ஆசி பெற்ற இப்பாத யாத்திரை முதலாம் நாளான நேற்று நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு புங்குடு தீவில் நிறைவடைந்தது .

இன்று காலை அங்கிருந்து புறப்பட்டு வேலணையை வந்தயும்.

## சுழிபுரத்தில் மருத்துவ முகாம்





சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உதய வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இலவச மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (09) முன்னெடுக்கப்பட்டது.

இந்த மருத்துவ முகாமில் 35 வயதுக்கு மேற்பட்ட இதுவரை நோயாளர் கிளினிக் செல்லாதோர் கலந்து கொண்டனர். அவர்களுக்குரிய நீரிழிவு, உயர் குருதிய முக்கம், கொலஸ்ரோல், கண், பல் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது சங்கானைப் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி காயத்திரி தனஞ்சயன், சங்கானை பிரதேச வைத்தியசாலை பல் வைத்திய நிபுணர் அம்பலவாணர் இந்திரகுமார், பொது சுகாதார பரிசோதகர் உமாசுதன், சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், தொல்புரம் ஆரம்ப மருத்துவ பிரிவு உத்தியோகத்தர், உதய வாழ்வு நிறுவனத்தின் இயக்குநரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன், கலைமகள் சனசமூக நிலையத்தினர் , சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# துளிர்விடும் சிறார்களின் பாழாய்போகும் எதிர்காலம்




தாவரமொன்றில் புதிதாய் துளிர்விடுகின்ற அரும்பானது விரிந்து அழகான மலராக பூத்துக் குலுங்குவதற்கு முன்னரே சிலர் அத்தாவரத்தின் அரும்பைப் பறித்து விடுகின்றனர். செடியிலிருந்து பறிக்கப்பட்ட அரும்பானது, மலர்ந்து காற்றில் அசைந்தாடும் அழகை எல்லா மானுடர்களாலும் இரசனை செய்துவிட முடியாது. மலரின் அரும்பைப் போன்றே துள்ளிக் குதித்து விளையாடி பள்ளிச் சென்று பாடம் பயில வேண்டிய பருவத்தில் பல சிறார்கள் தன் குடும்பம்சார் உறவினர்களாலும் அல்லது தம்மைச் சூழவுள்ள சமூகத்தினவர்களாலும் அன்றாடம் ஏதோவொரு வகையில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஆரம்ப காலங்களில் கருவுற்றிருக்கும் தாயொருவர் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைக்கு எவ்வாறு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது, சமூகத்தில் எவ்வாறு நற்பிரஜையாக வளர்ப்பது, தன் குழந்தையைச் சமூகத்தில் எவ்வாறு சிறந்த வெற்றியாளனாக மிளிரச் செய்வது போன்ற பல கனவுகளை மனதில் சுமந்துக் கொண்டிருப்பார். எனினும் இன்றைய நவீன யுகம் வளர வளரத் தன் குழந்தை பிறந்ததும் நரகமாக மாற்றம் பெற்றுள்ள சமூகத்திலிருந்து எவ்வாறு குழந்தையின் எதிர்காலத்தை பாதுகாப்பது என்ற அச்ச உணர்வே தற்போதைய தாய்மார்களின் மனதுகளில் தோன்றம் பெறுகின்றது.

நாம் அன்றாடம் தகவல்களை நுகர்வதற்காக பயன்படுத்துகின்ற அனைத்து ஊடகங்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த செய்திகள் வெளிவராத நாள்களே இருந்ததில்லை. பூகோளமயமாதலுடன் இணைந்த தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி உலகை மிக வேகமாக மாற்றங்களுக்கு உட்படுத்தி வருகின்றது. உலக மாற்றத்தோடு இணைந்து மனிதர்களிடத்தில் நிலைக் கொண்டிருந்த கண்ணியம், கருணை போன்ற அம்சங்களும் மனிதர்களின் மனங்களில் இருந்து மறைந்து போய்விட்டன.

எதிர்காலத் தலைவர்களாக உருவாகவுள்ள சிறுவர்களுக்கு இன்றைய சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகளுக்கு அல்லது துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க வயது வந்த மனித சமூகத்துக்கு இன்று நேரமில்லை. இன்றைய சமூகத்தில் சிறுவர்களுக்கு எந்த வகையான பாதுகாப்பு காணப்படுகின்றது, என்பது ஐயம் மிக்க விடயமொன்றே.

இலங்கை போன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களில் தாய், தந்தையென இருவருமே குடும்ப ஏழ்மையைப் போக்கப் பணத்தைத் தேடி ஓடுகின்றனர். அவர்களின் பிள்ளைகள் உரிய உறவுகளின் நெருங்கிய அரவணைப்பின்றி வாழ வேண்டிய அவல நிலையே சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான ஆரம்ப அடித்தளத்தை வழங்குகின்றது.

18 வயதுக்குட்பட்டவர்களே சிறுவர்கள். இவர்களுள் 5 வயது தொடக்கம் 9 வயது வரையான சிறுவர்கள் தமது பெற்றோரைக் குறிப்பாக தனது தாயைச் சார்ந்தே இயங்குகின்றனர். பதின்ம வயதை அடைந்த பிற்பாடு தாமே தனித்து இயங்க ஆரம்பிக்கும் வேளையில் பல உடல் மற்றும் உளவியல் ரீதியான மாற்றங்களை எதிர்நோக்கத் தொடங்குகின்றனர்.

குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையரைவிட்டுச் சற்றும் விலகிச் செல்லாத குழந்தைகள் பதின்ம வயதுப் பருவத்தில் பெற்றோரின் கட்டுப்பாடுகளை கடந்துச் செல்ல முற்படுவர். இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்க வேண்டும். உரிய அரவணைப்பின்றிச் சிறுவர்களைத் தனிமையில் வாழ வழியமைப்பதாலேயே இன்று உலகளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் என்று குறிப்பிடப்படுவது வெறுமனே பாலியல் ரீதியாக ஏற்படக் கூடிய விடயங்கள் மட்டுமல்ல. அதற்கு மேலாகச் சிறுவர்களைக் கவனக் குறைவாக நடத்துதல், தேவையில்லாமல் சிறுவர்களைக் கழந்துக் கொள்ளுதல், சிறுவர்களைத் தாக்குதல் , சிறுவர்கள் கூறுவதைச் செவிமடுக்காமல் இருத்தல், அத்தி

(08 ஆம் பக்கம் பார்க்க)



# இரு வீதிகளுக்கு அடிக்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பிரதேச சபை எல்லைக் குட்பட்ட பண்ணை வீதி மற்றும் பண்ணை 2 ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றன.

சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இரு வீதிகளுக்கும் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் திருமதி பாரத் பத்மாவின் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டு புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## துளிர்விடும் சிறார்களின்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாவசியமற்ற உடல் தொடுகைகளை மேற்கொள்ளுதல் , கல்வி கற்பதற்கான உரிமையை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்க மறுத்தல், யாசகம் எடுக்கச் செய்தல், ஆபாசப் படங்களைக் காட்டுதல் அல்லது ஆபாசப் படங்களைப் பார்க்கத் தூண்டுதல், அடிமையாக மாற்றுதல், கடத்திச் செல்லுதல் , சிறுவயதிலேயே தொழிலாகிய மாற்றுதல், சிறுவர்களுடைய உணர்வுகளை மதிக்காமலிருத்தல், அந்தரங்க உறுப்புக்களை தொடுதல் போன்றனவும் சிறுவர் துஷ்பிரயோகமே.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளாமல் குடும்பக் கௌரவத்துக்காக அதனை மூடி மறைக்கின்றனர். இது இதனைப் போன்ற மற்றுமொரு துஷ்பிரயோக நடவடிக்கை இடம் பெறுவதற்கு வழி வகுக்கிறது.

2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கமைய 18 வயதுக்கு உட்பட்ட 15 கோடி சிறுமிகளும் 7 கோடி 30 இலட்சம் சிறுவர்களும் ஓராண்டுக்குள் பாலுறவில் கட்டாயமாக ஈடுபடுத்தப்படல் அல்லது வேறுவிதமான பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

வேறு சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 36 வீதமான பெண்களும் 29 வீதமான ஆண்களும் தம்முடைய சிறுவர் பருவத்தில் ஏதாவது ஒரு பாலியல் துஷ்பிரயோத்துக்கு உள்ளாக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் குடும்ப உறவினர்களாலேயே இவ்வாறான பாலியல் வன்கொடுமைகள் இன்று அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றமை கவலைக்குரிய விடயம்.

இன்றைய காலகட்டத்தில் வெளிவருகின்ற ஆபாசக் காட்சிகளை அதிகமாக உள்ளடக்கிய திரைப்படங்கள் தொலைத் தொடர்பு சாதனங்களின் நிகழ்ச்சிகள் மற்றும் சிற்சில விளம்பரங்கள் போன்றன பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்க காரணமாக அமைகின்றன. இதனோடு ஆண் மற்றும் பெண் என இரு பாலினத்தவரினதும் திருமண வயதெல்லை உயர்வடைதல், நெருக்கமான குடும்ப அமைப்புகள், அதிகரித்த போதைப் பொருள் பாவனை போன்றனவும் பாலியல் துஷ்பிரயோக செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்கின்றன. இவ்வாறான சூழ்நிலைகளுக்கு ஆளாகும் சிறார்கள் உடல் மற்றும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் மாத்திரம் 2023 ஆம் ஆண்டு ஆரம்பமானது முதல் கடந்த ஏழு மாதங்கள் வரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் துஸ்பிரயோகம் குறித்த முரண்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் ஜீலை 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபையின் தலைவர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார். 5,400 முறைப்பாடுகளுள் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து 1,296 முறைப்பாடுகளும் , கடுமையான காயங்கள் தொடர்பில் 163 முறைப்பாடுகளும் , கடுமையான பாலியல் துக்ஷ்பிரயோகம் குறித்து 242 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன. சிறுவர் யாசகம் எடுப்பது தொடர்பில் 196 முறைப்பாடுகள் கொழும்பு மற்றும் ஏனைய நகர் புறங்களில் பதிவாகியுள்ளன.

இவ்வாறான துஷ்பிரயோக குற்றச் செயல்களையும் கடந்து சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் மற்றும் இணைய வெளியில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக 110 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த முரண்பாடுகளில் சிறுமிகள் குறித்து 76 முறைப்பாடுகளும் , சிறுவர்கள் குறித்து 31 முறைப்பாடுகள் பதிவாகி யுள்ளன.

பெற்றோர்களே தமது பிள்ளைகளின் நலன் குறித்து அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். துஷ்பிரயோகம் குறித்த கொடுமைகள் நாளாந்த உலகில் ஏதோவொரு இடத்தில் இடம்பெற்றுப் கொண்டே இருக்கின்றது.

ஆகவே தங்களது பிள்ளைகளைத் தாமே பாதுகாத்தல் வேண்டுமென்ற விழிப்புணர்வு பெற்றோர்களிடத்தில் ஏற்பட வேண்டும். தமது பிள்ளைகளின் பாலியல் சார்ந்த பாதுகாப்பு விடயத்தில் வேறெந்த நபரையும் நம்பி விட முடியாது. எவரை நல்லவரென நம்பி வாழ்கின்றோமோ, அவர்களே நமது குடும்பத்துக்குள் அல்லது தம்மை அண்டி வாழ்பவர்களிடம் தவறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அபாயமுண்டு. பிள்ளைகளின் எதிர்கால வாழ்வை எண்ணி பெற்றோர்கள் அவதானமாகச் செயற்பட்டால் இயன்றளவில் பாலியல் சார்ந்த துஷ்பிரயோக நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும்.

இலங்கையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபையால் சிறுவர் துஷ்பிரயோகத்தை' கட்டுப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தை செப்டெம்பர் மாதம் முதல் நடைமுறைப் படுத்தினாலும் கூட பெற்றோர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டாலே சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளை முற்றிலும் கட்டுப்படுத்த முடியும்.

பெற்றோர்களே தங்களின் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுங்கள்.

**சுப்ரமணியம் காயத்திரி,**
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.







# சாரணர் குழு அங்குரார்ப்பணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவனெல்ல, அரநாயக திப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலய கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் ரம்ஸானின் தலைமையில் மூன்றாவது சாரணர் குழு அங்குரார்ப்பணமும் சின்னம் சூட்டும் மற்றும் கழுத்துப் பட்டி அணிவிக்கும் நிகழ்வும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சாரண பொறுப்பாசிரியர்களான நூர் நிஸா மற்றும் முஹம்மட் சபீர் ஆகியோரின் ஒத்துழைப்போடு மாவட்ட சாரண ஆணையாளர் பிரசாத் வல்பொல, ஓய்வு பெற்ற மாவட்ட ஆணையாளர் நந்தலால், பிரதி மாவட்ட ஆணையாளர் உத்பொல பியசேன மற்றும் சாரண ஆணையாளர் ஹேரத், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாக தலைவர் பர்ஹான் உமர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் சைத் உசைன்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# ஓட்டமாவடி மில்லத் வி.க. 25 ஓட்டங்களால் வெற்றி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஓட்டமாவடியில் ஒழுங்கு செய்திருந்த மாவடிச்சேனை றியல் விளையாட்டுக் கழகத்துக்கும், மில்லத் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சிநேக பூர்வக் கிரிக்கெட் போட்டியில் மில்லத் விளையாட்டுக் கழகம் 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற போட்டியில் முதலில் துடுப்பாடிய மில்லத் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் இம்தியாஸ் 53 ஓட்டங்களையும், முஹம்மட் அஸ்கர் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய மாவடிச்சேனை றியல் விளையாட்டுக் கழகம் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதில் ஆஸாத் 37 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியில் மில்லத் விளையாட்டுக் கழக வீரர் முஹம்மட் அஸ்கர் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார்.



# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டம்

## 21 ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வின் 21 ஆம் நாள் நிகழ்வு நேற்று (10) ஞாயிற்றுக் கிழமை கந்தரோடை அருளானந்த பிள்ளையார் ஆலய குரு சிவஸ்ரீஜெயக்குமாரக் குருக்கள் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே இடம்பெற்றது.

யாழ். மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும் சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

காரைநகர் பிரதேச பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாண நுண்கலைக் கல்லூரி திருத்திய தலைக்கோலி நுண்கலை மாணி திருமதி தனுசா சிவமைந்தனின் நடனம் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.






















# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சமுர்த்தி மகா சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனைப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 345 மாணவர்களுக்கான இலவச பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கல்முனைப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (09) மகாசங்க முகாமையாளர் எம்.என்.எம். நௌசாத் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி பிரதம விருந்தினராகவும் தலைமையக சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் கௌரவ விருந்தினராகவும், சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான எஸ். சித்தி பரீரா, ஏ.எம். பைசால், யூ. கே.சிறாஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.





# சுதேச சர்வதேச மருத்துவ மாநாடு

(அபு அலா)

சுதேச மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வார்த்தகக் கண்காட்சியும் கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தலைமையில் இடம் பெற்ற இந்த சர்வதேச மாநாடு, கல்வி மற்றும் வார்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துகொண்டு வார்த்தகக் கண்காட்சியின் கூடத்தை திறந்து வைத்தார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, சுதேச அமைச்சின் உயரதிகாரிகள், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களங்களின் மாகாண ஆணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதில் 9 மாகாண சுதேச மருத்துவத் திணைக்களங்களின் காட்சிக் கூடாரங்களும், 35 ஆயுள்வேத, சித்த யுனானி மற்றும் பாரம்பரிய தனியார் நிறுவனங்களின் காட்சிக் கூடாரங்களும் அமைக்கப்பட்டு தங்களின் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனையும் செய்தனர்.

# கிரிக்கெட் உபகரணம் வழங்கி வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

புதிய கோட்டமுனை விளையாட்டுக்கழகத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கிரிக்கெட் உபகரணங்களை அண்மையில் கழக நிர்வாகிகளிடம் கையளித்தார்.

விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் கடின பந்து விளையாடுவதற்கு உரிய விளையாட்டு உபகரணங்களின் தேவை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்தக் கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன என்று கழகத்தின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.





# பொத்துவில் ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் வழங்கல்

(றியாஸ் ஆதம்)

பொத்துவில் ஆதார வைத்திய சாலைக்கு வருகைதரும் நோயாளர்களுக்கு பாதுகாப்பாக மருந்துகளை வழங்கும் பொருட்டு, பொத்துவில் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) 1997ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர் குழுவினர் ஒரு தொகுதி மருந்துகளை வழங்கியுள்ளனர்.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (08) இடம்பெற்றது.

இதன்போது வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் எம்.எம்.எம்.றஹிமிடம் 97 சாதாரண தர மாண வர் குழுவின் தலைவர் ஏ.ஜி.எம்.முசம் மத், செயலாளர் ஏ.சி.எம். நபீல், பொரு ளாளர் ஹக் (மௌலவி), பொதுச் சுகா தார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வழங்கினர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறுப்பினர்களின் பங்களிப்பில் பொத் துவில் பிரதேசத்தில் பல்வேறு வேலை திட்டங்களை மேற்கொண்டு வரும் 97 சாதாரண தர மாணவர் குழுவினர் ஏற் கனவே பொத்துவில் வைத்திய சாலைக்கு ஒருதொகுதி குளிசைப் பக்கட்டுக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட பயிற்சி பெற்ற ஊழியருக்குச் சான்றிதழ்

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் கிழக்கு மாகாண சபையால் பலநோக்கு அபிவிருத்தி செயலணி ஊழியர்கள் 886 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் 161 பேருக்கான நான்கு நாள் விசேட பயிற்சியை வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபகமும், கலை நிகழ்ச்சியும் சனிக்கிழமை (09) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

இங்கு தலைமையுரை நிகழ்த்திய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தனதுரையில்,

நோயாளர்களை எப்படி கையாள வேண்டும் என்பது முதல் சுகாதாரத் துறையின் பல்வேறு விடயங்களையும், நேர முகாமைத்துவத்தையும், சுகாதாரப் பணியின் மாண்பையும் கற்றுக் கொண்ட நீங்கள் தொடர்ந்தும் உங்கள் பணியை சிறப்பாக செய்ய வேண்டும்.

நாட்டில் பொருளாதாரச் சிக்கல் நிறைந்த இந்தக் கால கட்டத்தில் இலங்கையில் எங்குமில்லாது இப்படியான ஒரு பணியை கல்முனை பிராந்திய காரியாலயம் செய்திருப்பது எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. – என்றார்






இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.எம்.வாஜித், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம். மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர், பிரிவுத் தலைவர்கள் உட்பட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# அகில இலங்கை 'பாண்ட்' கண்டி இரண்டாம் இடம்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான பாண்ட் வாத்திய போட்டியில் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலை ஒன்று வெற்றி பெற்றுள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது என்று பாடசாலைச் கல்வி சமூகம் தெரிவித்துள்ளது.

# கொழும்பில் 800 மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்க ஏற்பாடு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நடவடிக்கை

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளுக்காக 144 வீட்டுத் தொகுதிகளைக் கொண்ட அடுக்கு மாடித் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, நாரஹேன்பிட்டி, காலிங்க மாவத்தையில் அமைந்துள்ள இந்த வீட்டுத் தொகுதி நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டுத் தொகுதியை கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வீட்டுத் தொகுதியானது சுமார் 800 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கும்.

450 சதுர அடியைக் கொண்ட இந்த வீடு இரண்டு படுக்கையறைகள் கொண்டது. தற்போது இந்த வீட்டின் பெறுமதி சுமார் 60 லட்சம் ரூபா என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

இந்த விடுதி வீட்டுத் தொகுதி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு இலவச வழங்கப்படவுள்ளது.

விடுதி வசதிகள் இன்மையால் பல பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

அரசின் உதவியுடன் விடுதிகளை நிர்மாணிப்பதன் மூலம் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். தொலை தூரங்களில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கும் இவ்வாறான விடுதிகளை நிர்மாணிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை விரைவாக தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



# கார்மல் பற்றிமாவின் மாணவருக்குப் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம் )

பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதிபெற்ற கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரித் திறந்த வெளியரங்கில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உயிரியல், பௌதீக விஞ்ஞான, தொழில்நுட்ப , கலை, வர்த்தக துறைகளை சேர்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு உள்ளிட்ட ஆசிரியர்களும் பாராட்டப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் வெற்றிக்குப் பக்க பலமாக இருந்த பகுதித் தலைவர்கள், பாட ஆசிரியர்கள், கல்லூரியில் கற்பித்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சபை பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பெற்றோர் கலந்து கொண்டனர்.





# அம்பாறை நகர சபை மைதானத்தில் ரெனிஸ் மைதானம் திறந்து வைப்பு

அம்பாறை நகர சபை மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ரெனிஸ் விளையாட்டுத்திடல் நேற்று (10) உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ஷ, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய சிறி, இலங்கை ரெனிஸ் சங்கத்தின் தவிசாளர் இக்பால் பின் இஸ்ஹாக், இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி, உள்ளிட்ட அதிதிகள் இணைந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரெனிஸ் திடல் பெயர் பலகை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

அத்துடன் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என். கே. தமயந்த விஜய சிறி உள்ளிட்ட விருந்தினர்கள் டென்னிஸ் விளையாட்டு கூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றினர்.

ரெனிஸ் மைதானத்தை நிர்மாணிப்பதற்குப் பணியாளர்களை இலங்கை இராணுவம், இலங்கை பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் பங்களிப்புகளை வழங்கியிருந்தது.

இந்த மைதானத்தை நிர்மாணிப்பதற்கு அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.ஏ.என்.கே. தமயந்த விஜய ஸ்ரீ முன்னின்று வழிநடத்தியுள்ளார்.

# பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது ஆண்டில் சிரமதானம்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் பொலிஸாரால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

சிரமதான நடவடிக்கையின் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வைத்தியர் எஸ்.எம்.ஏ அஸீஸ், பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி (எல்.எல்.பி) மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.











# பாரதியார் நினைவு தினமும் பரிசளிப்பும் சாய்ந்தமருதில்

**(நூருல் ஹுதா உமர் )**

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் மற்றும் சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலயம் என்பன இணைந்து மகாகவி பாரதியார் நினைவு தினத்தையும் பரிசளிப்பு நிகழ்வையும் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நடத்தின.

பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்சானின் நெறிப்படுத்தலில் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிஃப் தலைமையில் இன்று காலை (11) நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி முன்னாள் அதிபரும், சட்டத்தரணியுமான எம்.சி. ஆதம்பாவா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு முன்மாதிரியான கற்பித்தல் முறைகள் தொடர்பிலும், பாடசாலை ஒழுக்க நெறி தொடர்பிலும், நாட்டின் தற்கால நிலைகள் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார்.

மகாகவி பாரதியார் நினைவு தின பிரதான உரையை சிரேஷ்ட இலக்கிய வாதியும், ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரியுமான ஏ. பீர் முகம்மட் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபீத், ஓய்வு பெற்ற மூத்த ஆசிரியர் ஏ.எம். இப்ராலெப்பை, சாய்ந்தமருது கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எச். சபீகா, சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. பி. நௌசாத், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய அபிவிருத்தி சபை செயலாளர் அஸ்வான் எஸ். மௌலானா, பிரதிச் செயலாளர் யூ. எல். என். ஹுதா உமர், சாய்ந்தமருது காரியப்பர் வித்தியாலய பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.

# செப்ரெம்பர் 11 தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 22 வருடங்கள் நிறைவு!



செப்ரெம்பர் 11 பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 22 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

சுமார் மூவாயிரம் பேர் கொல்லப்பட்ட குறித்த பயங்கரவாத தாக்குதலை நினைவுகூறும் நிகழ்வுகள் இன்றைய தினம் அலஸ்காவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர் என தெரிவிக்கப் படுகிறது.

இந்தியாவில் இடம்பெற்ற ஜி -20 மாநாட்டை முடித்துக்கொண்டு வியட்நாமில் உள்ள தலைவர்களுடனான கலந்துரையாடலையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அலஸ்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் கலந்துக்கொள்ளவுள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலை நினைவு கூறும் வகையில் நியூயோர்க்கில் உள்ள நினைவுச்சின்னம் மற்றும் அருங் காட்சியகத்தில் இன்றைய தினம் இடம்பெறவுள்ள தேசிய விழாவில், துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் கலந்து கொள்ள உள்ளார்.

2001 ஆம் ஆண்டு அல்-கொய்தா என கூறப்படும் அமைப்பினர், 2 ஜெட் விமானங்களைக் கொண்டு, அமெரிக் காவின் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீது மோதியதால், இரண்டு கட்டடங்களும் இடிந்து வீழ்ந்தன.

செப்ரெம்பர் 11 என்பது அமெரிக்காவின் மாகாணங்களில் கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற தேசிய சேவை மற்றும் நினைவூட் டல் தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூடானில் ஆளில்லா விமான தாக்குதல்: 40 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழப்பு



சூடான் தலைநகர் கார்டோமில் இராணு வத்தினர் துணை இராணுவத்தினரை எதிர்த்து ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த ஆளில்லா விமானம் திசை மாறி அங்குள்ள சந்தைப்பகுதியில் வீழ்ந்ததில், 40 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 70 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சூடானில் ராணுவ ஆட்சி இடம் பெறுகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் யுத்தம் நடத்தி வருகின் றனர்.

இதனால், இருதரப்புக்கும் இடையே இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## உச்சம் தொட்ட மரண தண்டனை!



இந்த ஆண்டின் 8 மாதங்களில் சவுதி அரேபியா நீதிமன்றங்கள் 100 பேருக்கு மரண தண்ட னையை நிறைவேற்றியுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

பெரும்பாலான வழக்குகளில் சமூக ஊடக பதிவுகள் அல்லது போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக மக்கள் இவ்வாறு மரண தண்டனையை எதிர்கொண்டுள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மேலும், அதிகாரிகளின் இந்த நடவடிக்கையினால் தற்போது சிறை யில் இருக்கும் பல இளைஞர்கள் மரண பயத்தில் இருகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

## உக்ரைன் தலைநகரில் இரவோடு இரவாக ரஷ்ய படைகள் தாக்குதல்!

உக்ரைன் தலைநகரில் இரவோடு இரவாக ரஷ்ய படைகள் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நள்ளிரவு நேரத்தில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் காரணமாக வானில் சுமார் 2 மணி நேரத்திற்கு புகை மண்டலம் சூழ்ந்துள்ளது.

கீவ் நகரின் மீது சுமார் 5 முறை குண்டுகள் வீசப்பட்டுள்ளன என அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தகவல் தெரிவித்துள்ளன. இந்த தாக்குதல் காரணமாக டார்னிட்ஸ்கி, சோலோமி யான்ஸ்கி, போடில் உள்ளிட்ட பகுதிகளின் சில இடங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என கீவ் நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# சந்திரபாபு நாயுடுவின் கைதால் பரபரப்பு: ஆந்திரா மாநிலம் முழுமையாக முடங்கியது!





ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சியினர் நடத்தும் முழு அடைப்புப் போராட்டம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிகப்பட்டுள்ளது.

ஆந்திர முன்னாள் முதல்வரும், தெலுங்கு தேசக் கட்சித் தலைவருமான சந்திரபாபு நாயுடு 14 நாட்கள் நீதிமன்ற தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இன்று தெலுங்கு தேசம் கட்சி சார்பில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு பவன் கல்யாணின் ஜன சேனா கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஹர்த்தால் காரணமாக ஆந்திராவில் பரவலாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. பேருந்து போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. திருப்பதி – திருமலை இடையே மாத்திரம் சில வாகனங்கள் இயங்குகின்றன. பேருந்துகள், முச்சக்கரவண்டிகள் ஓடாததால் ரயில்களில் கூட்டம் அலை மோதுகின்றன.

இதனிடையே ஆங்காங்கே தெலுங்கு தேசம் கட்சியினர் வீதிமறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

தெலுங்கு தேசக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க பொலிஸார் 144 தடை உத்தரவுகளை பிறப்பித்துள்ளனர்.

# இந்தியா, பாரத் சொற்களில் எந்தப் பிரச்சினையும் இல்லை!

## ராகுல் காந்தி தெரிவிப்பு

இந்தியா, பாரத என்ற இரண்டு சொற்களிலும் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்தியாவின் ஆன்மாவை சிதைப்பவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பல நாட்டு மாணவர்களுடன் ராகுல் காந்தி உரையாடினார். அப்பொழுது வெளிநாட்டு மற்றும் இந்திய மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளித்து பேசினார்.

அப்போது, இந்தியா, பாரத் சர்ச்சை தொடர்பாக ராகுல் காந்தி கருத்து தெரிவிக்கையில், இந்திய அரசியல் யாப்பில் இந்தியா, பாரத் ஆகிய இரண்டு சொற்களுமே உள்ளன. அதனால் எங்களுக்கு அந்த இரண்டு சொற்களின் பயன்பாட்டிலுமே எந்தப் பிரச்சினையும் இல்லை.



ஆனால், எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு இண்டியா என்று பெயர் சூட்டப்பட்ட தால் பா.ஜ.கவுக்கு இந்தியா என்ற பெயர் எரிச்சலூட்டுகிறது. அதனாலேயே அவர்கள் பெயரை மாற்ற முற்படுகிறார்கள். இந்தியாவின் ஆன்மாவை சிதைக்க நினைப்பவர்கள் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு சாத்தியமாம்!

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு விரைவில் சாத்தியமாகும் என வி.கே. சசிகலா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் பள்ள மொளச்சூர் சிறீனிவாச பெருமாள் கோயில் மஹா கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்ட அவர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் மக்களவை தேர்தலுக்குள் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு சாத்தியமாகும். ஒவ்வொரு வீட்டுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவதாகதான் தி.மு.கவினர் தேர்தலில் வாக்குறுதி அளித்தனர்.

அரசு அதிகாரிகளுக்கு மாதம் சம்பளம் வழங்கவே அரசிடம் போதுமான நிதி இல்லை. அப்படி இருக்கும்பொது மகளிருக்கு மாதா மாதம் உரிமை தொகை வழங்குவது எந்த விதத்தில் சாத்தியமாகும் என்று

# அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன் முதல்வர் ஸ்டாலின் சந்திப்பு

டில்லியில் நடைபெற்ற ஜி–20 உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு சந்தித்தார்.

நேற்று முன்தினம் இரவு குடியரசுத் தலைவர் உலக நாடுகளின் தலைவர்களுக்கு சிறப்பு விருந்து அளித்தார்.

இந்த விருந்தில் பங்கேற்பதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் காலை டில்லிக்கு புறப்பட்டுச் சென்றார். குடியரசுத் தலைவர் அளித்த விருந்தில் அவர் பங்கேற்றார்.

இந்த விருந்தின்போது, அமெரிக்க ஜனாதிபதி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்துவைத்தார். இருவரும் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.